# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை 03 – 2020

சுட்டெண் : ............... தமிழ் (T–72) நேரம்:3.00 மணித்தியாலம்

பகுதி - I

**அறிவுறுத்தல்கள்** : பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடைதருக

### பகுதி I

1. **மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

அ) அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடா அ யானைக் கழற்காற்பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே

(i) பேகனின் கொடைச்சிறப்பு வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக.

(ii) இச் செய்யுளில் கையாளப்பட்டுள்ள உவமையணியை எடுத்துக்காட்டி விளக்குக

(iii) அறத்தினை போற்றி வாழும் பேகனின் பண்பினை எடுத்துக்காட்டுக.

ஆ) அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச
வில்லை ஊன்றிய கையோடும், வெய்து உயிர்ப்போடும். வீரன்,
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்! கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லை காண்பு அளவும் நின்றான் இமைப்பிலன் நயனம் என்றான்

(i) இப்பாடல் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.

(ii) பாடலில் கையாளப்பட்டுள்ள அணியினை விளக்குக.

(iii) இராமன் மீது இலக்குமணன் கொண்டுள்ள பாசம் புலப்படுமாற்றினை எடுத்துரைக்க.

(12+12=24 புள்ளிகள்)

2. “அ” பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடைதருக.

**அல்லது**

“ஆ” பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடைதருக.

**அ)**

பாடுகின்றோர் எல்லோரும் கவிஞர் அல்லர்
பாட்டென்றால் பண்டிதர்க்கே உரிமை அல்ல.
ஓடுகின்றப் பெருவெள்ளப் பெருக்கே போல
உணர்ச்சியிலே ஊற்றெடுத்த ஒளியால் ஏங்கி
வாடுகின்ற மக்களினம் மாட்சி கொள்ள
மறுமலர்ச்சிப் பெருவாழ்வை வழங்கும் ஆற்றல்
கூடுகின்ற கொள்கையினால் எழுச்சி கொண்டு
குமுறுகின்ற கோளரியே கவிஞன் ஆவான்!

பஞ்சணையில் வீற்றிருந்து பனுவல் பார்த்துப்
பாடுகின்ற கவிதைகளும் பாரான், வேந்தர்க்கு
அஞ்சியவர் ஆணைவழி அடங்கி நின்றே
ஆக்குகின்ற கவிதைகளும் அழிந்து போகும்.
கஞ்சியின்றிக் கந்தை சுற்றி வாழ்வானேனும்
கனல்வீசி எரிமலைதீ கக்கல் போலே
விஞ்சுகின்ற சிந்தனையால் விழுங்கப்பட்டு
விருந்தளிக்கும் விறலோனே கவிஞனாவான்!

கற்கண்டே செழுந்தேனே கனியே என்று
கலகலப்பாய்ச் சுவைப் பெயர்கள் கலந்து நல்ல
சொற்கொண்டு சொல்கின்ற கவிதை எல்லாம்
சொன்னவர்க்குத் தெரியாமல் தொலைந்து போகும்.
விற்கொண்டு விடும்வீரன் அம்பு போல
விசைகூடும் அறிவு போர் வீறு தாங்கித்
தற்கொண்ட புலமைவெறிச் சொல்லாற் சான்றோர்
சாற்றுகின்ற கவிதை என்றுஞ் சாகவில்லை!

அம்மானை திருப்பள்ளி எழுச்சி கோவை
அந்தாதி கலம்பகங்கள் பார்த்துப் பார்த்து
விம்மாமற் பொருமாமல் கண்ணீர் விட்டு
விலைக்கு மாரடிக்கின்ற மெல்லியர் போல்
சும்மாவோர் உணர்வின்றிச் சொற்கள் சேர்த்துச்
சொன்மாலை தொடுகின்றோர் கவிஞரல்லர்
தன்மானத்து உள்ளொளியால் உலகை ஓம்பும்
தனியாற்றல் தாங்கி நிற்பேர் கவிஞராவார்!

பாட்டினுக்கோர் புலவனென்றே தமிழ்நாடெங்கும்
பாராட்டும் பாரதியின் கவிதை ஆற்றல்
நாட்டிற்காம் விடுதலைப்போர் வெறியை ஊட்டி
நற்றமிழுக்கும் மறுமலர்ச்சி நல்கக் கண்டோம்
வீட்டிற்குள் வீற்றிருந்தே கொள்கை இன்றி
விண்ணப்பப் பதிகங்கள் விளம்புவோரை
ஏட்டிற்குள் கவிஞரென எழுதினாலும்
இறவாத கவிஞரையே உலகம் ஏற்கும்!

I. கவிஞனுக்குரிய இலக்கணங்களாக கவிதையில் கூறப்பட்டுள்ளவற்றை விளக்குக.
II. பயன்பாடற்ற கவிதைகளை எழுதுவோரை கவிஞர், இகழ்ச்சிப்படுத்தும் விதத்தினை விளக்குக.
III. "நாட்டிற்காம் விடுதலைப்போர் வெறியை ஊட்டி நற்றமிழுக்கும் மறுமலர்ச்சி நல்கக் கண்டோம்" – என்னும் வரிகளின் மூலம் வெளிப்படுத்த விழையும் கருத்தை விளக்குக.
IV. கவிதையில் பயன்படுத்தப்பட்டுள்ள எவையேனும் இரண்டு உவமைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

**அல்லது**

**ஆ)** இனிமையான வைகறைப் பொழுதாலோ வயிற்றைக் குழுமையாக நிறைத்திருந்த தண்ணிச் சோற்றாலோ வலுவோடு வேலை செய்ததால் ஏற்பட்ட தெம்பாலோ மட்டும் அவனுக்கு இந்த உற்சாகம் ஜனிக்கவில்லை.
அதற்கு வேறு காரணமும் இருந்தது.
"அவள்"
அவனை இயக்கும் ஆதார சுருதி - நாகாத்தை சற்று நேரத்துக்கு முன்னர்தான் சங்கீதத்தை அவன் செவிகளில் பெய்துவிட்டு கெண்டைக்கால் வயற்சுழியில் புதையப் புதைய லாகவ நடை போட்டுச் சென்றாள்.
சுழியில் புதைந்த அவளுடைய ஒவ்வோர் அடியும் சரவணமுத்துவின் பம்மிப் பருத்த மார்பைத் தாண்டிக் கொண்டு அவன் இதயத்தின் மீது மலர்த்தடத்தைப் பதித்து விட்டிருந்தது. "களுக்" "களுக்" என்ற இன்ப சுருதியோடு அவள் அடிபெயர்த்து வைத்த ஒய்யாரம். சிற்சில சமயம் சுழியில் ஆழப் புதையுண்ட தன் கால்களை அவள் மீட்பதற்குச் செய்த பிரயத்தனம். அதிலிருந்து பிறந்த பரதம். கை என்ற வாழைக் குருத்து ஒய்யார லயத்தோடு வீசித் துவண்ட கோலம். அதில் குதிபோட்ட கண்ணாடி வளையல்களின் கலீர் கலீர் என்ற சங்கீதம். பனை ஓலைப் பெட்டியைத் தாங்கியிருந்த அந்தத் தலையின் கலைக்கோலம். எதேச்சையாக நெற்றியில் விழுந்து கிடந்த கூந்தல் இழைகள், அள்ளி முடித்திருந்த கொண்டைக்குத் திருஷ்டி பட்டுவிடாமல் கவசம் போல் காத்து நின்ற முக்காடு. தளிர் மேனியை இறுக்கிப் பற்றியிருந்த சட்டை. பாதி வயிறு வெளியில் தெரிய முந்தானையை இடுப்பில் அள்ளிச் செருகியிருந்த காம்பீர்யம். இவையெல்லாம் சேர்ந்து சரவணமுத்துவைப் பாடு! பாடு! என்று பணித்தன. பாடிவிட்டான்.
நாகாத்தை அவன் பார்வையிலிருந்து மறைந்து விட்டாள். அதுவரை இடுப்பில் வைத்திருந்த கையை எடுத்து ஓய்ந்திருந்த மண்வெட்டிக்கு வேலை வைத்தான் சரவணமுத்து. மண்வெட்டிக்கு மட்டும்தான் அவன் வேலை வைத்தானா? மனத்துக்கும் சற்று வேலை வைத்தான்.

அடுத்தநாள் இரவு நடைபெறப்போகும் சுபத்திரை கல்யாணம் அவனுடைய நெஞ்சுக் களரியில் கூத்தாடியது கூத்தில் அவனுக்குத் தரப்பட்ட பாத்திரம் அர்ஜூனன்! தன்னை ஒரு நிஜ விஜயனாகவும், நாகாத்தையைச் சுபத்திரையாகவும் ஒப்பனை செய்து துள்ளியது அவன் உள்ளம். தான் வேலை செய்து கொண்டிருந்த மண் வெட்டியையே ஒரு கணம் தூக்கிப் பிடித்து விஜயனின் வில்லாக அதைப் பாவனை செய்து பார்த்துக் கொண்டான் சரவணமுத்து…

I. அதிகாலை வேளையில் சரவணமுத்துவிற்கு உற்சாகம் ஜனிக்க காரணமானவற்றை விளக்குக

II. சரவணமுத்துவின் உள்ளத்தினை பாடாய்படுத்திய நாகாத்தையின் பாத்திரப்படைப்பினை விளக்குக

III. சரவணமுத்து நாகாத்தை மீது கொண்ட தொடர்பினை கலைநுட்பமாக வெளிப்படுத்தும் உரைநடை சிறப்பை வெளிப்படுத்துக.

IV. ஆசிரியரின் மொழிநடைபற்றி கருத்துரைக்க.

(4x4=16 புள்ளிகள்)

## பகுதி – II

3. **குற்றங்கடிதல்** என்ற அதிகாரத்தில்
   அ) குற்றங்களாக கருதப்படுவன யாவை விளக்குக.
   ஆ) குற்றம் கடியும் வழிகளாக கூறப்பட்டுள்ளவற்றை விளக்குக.
   இ) சிறப்பு வகையால் குற்றம் நீங்கும் வழிகளை விளக்குக.
   ஈ) கையாளப்பட்டுள்ள உவமை அணியை எடுத்துக்காட்டி விளக்குக.

(20 புள்ளிகள்)

4. வடகரைக்கு வந்த குகனிடம் இராமன் தங்கியிருந்த இடத்தினை பரதன் கேட்டது தொடக்கம் குகனது கட்டளையினால் நாவாய்கள் வந்தடைந்தது வரையான பகுதியினை அடிப்படையாக கொண்டு,
   அ) இராமன் உறங்கிய இடத்தினை கண்ட பரதனின் துயரநிலை
   ஆ) இலக்குமணனின் நிலையை அறிந்த பரதனின் துயரம்
   இ) குகனது கட்டளையினால் நாவாய்கள் வந்த சித்திரிப்பு
   ஈ) இப்பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள அணிகள்
   முதலானவற்றை விளக்குக. (20புள்ளிகள்)

5. **தேம்பாவணி** காட்சிப்படலத்தில்
   அ) முல்லை நில இடையர்கள் யேசுபிரான் மீது கொண்ட பக்தி
   ஆ) இடையர்கள் யேசுபிரானின் அவதாரமகிமையை புகழ்ந்த விதம்
   இ) இடைச்சியான சாந்தியினூடாக வெளிப்படுத்தப்படும் யேசுபிரானின் பெருமைகள்
   ஈ) யேசுபிரானை கண்டு வழிபட்டு இடையர்கள் அடைந்த இன்பம்
   முதலானவற்றை விளக்குக. (20புள்ளிகள்)

6. புதுமைப்பித்தனின் **தமிழர் நாகரிகத்தில் கிராமிய வாழ்க்கை** என்ற கட்டுரையினை அடிப்படையாக கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.
   அ) நாகரிகம் என்பதற்கு நம்மத்தியில் காணப்படும் விளக்கங்களாக கூறப்படுவனவற்றை எடுத்துக்காட்டுக.
   ஆ) சந்திரோதயக் காட்சியினை பட்டணத்துக்காரர், கிராமத்துக்காரர் பாடுகின்ற விதத்தினை விளக்குக.
   இ) 'பசிப் பகையை விரட்டும் முதல் மதில் கிராமங்கள்' என்ற கருத்தினை கட்டுரையாசிரியர் எவ்விதம் விளக்குகிறார்.
   ஈ) 'கிராமத்துக்காரன் ஒவ்வொருவனும் அந்தக்கிராமத்தின் சரித்திர ஆசிரியன்' எனக்கூறுவதற்கான காரணங்களை விளக்குக
   உ) பட்டணம் - கிராமம் என்பனவற்றுக்கு கட்டுரையாசிரியர் தரும் விளக்கத்தை தருக.

(20புள்ளிகள்)

7. அப்துல் ஸமதுவின் **எனக்கு வயது பதின்மூன்று** என்ற சிறுகதையினை அடிப்படையாகக் கொண்டு,

அ. தனிமனித இயல்புகள் வெளிப்படுமாற்றினை எடுத்துக்காட்டுக
ஆ. தாஹா என்ற பாத்திரப் படைப்பு கதைவளர்ச்சிக்கு உதவுமாற்றை விளக்குக.
இ. சுதந்திரமான தொழில் அடிமை வாழ்க்கையினை உடைத்தெறிந்து எதிர்கால வாழ்வின் வெற்றிக்கு ஆதாரமாக அமைவதனை கதாசிரியர் எவ்விதம் வெளிப்படுத்துகிறார்?
ஈ. நானும் இவ்வீட்டில் ஒரு சிறைக்கைதியா? என்ற கேள்வி ஸல்மாவின் உள்ளத்தில் ஏற்பட்டமைக்கான சூழலை விளக்குக.

(20புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

அ. **அமலனாதிபிரான்** என்னும் பதிகத்தில் திருமாலின் பெருமைகள்
ஆ. **நகுதக்கனரே…** என்ற புறநானூற்றுப் பாடலின் மூலம் பாண்டிய மன்னனின் தன்மான உணர்வும் குடிமக்களை காத்தலில் உள்ள அரசனின் கடமை உணர்வும்
இ. **இரு துயரங்கள்** என்ற நாடகத்தில் மனோகரன் என்ற பாத்திரத்தின் அவலம்
ஈ. பாரதியாரின் மொழிபெயர்ப்பு கவிதையான **பெண் விடுதலையில்** பெண்விடுதலைக் கருத்துக்கள்
உ. **ஒரு வெண்மணற்கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது** என்ற நாவலில் சௌந்தரம் என்ற பாத்திரப்படைப்பு..

(20 புள்ளிகள்)